# சங்க இலக்கியத்தில் கலைகள்

*முனைவர் கி. சங்கர நாராயணன்*
உதவிப் பேராசிரியர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

சங்ககால மக்களின் இசைக்கலை, வார்ப்புக்கலை, தச்சுக்கலை மற்றும் வேளாண் கலைகளைச் சங்க இலக்கியங்கள் எங்ஙனம் எடுத்துரைக்கின்றன என்பதைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்ககாலச் சமூகம் நில அடிப்படையிலான சமூகம் ஆகும். இச்சமூகத்தின் அடிப்படை என்பது நிலத்தின் தகவமைப்பிற்கு ஏற்ப தங்கள் வாழ்வாதாரங்களைப் பெறுவதாகும். அவ்வடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நான்கு நிலங்கள் வாழ்வாதாரங்களைத் தருகின்ற நிலமாக முன்மொழியப்படுகிறது. இந்நிலத்தில் அதன் தன்மைக்கேற்ப, அந்நிலத்தில் கிடைக்கின்ற அனைத்தையும் தங்கள் வாழ்வாதாரங்களாக மாற்றிக்கொள்ளும் திறன் மனிதர்களுக்கு உண்டு. ஆதிகால மனிதன் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தான். அதன்பின் வேட்டைச் சமூகமாக வளர்ந்த பின் குழுவாக வேட்டையாடியதையும் காணமுடிகிறது. சங்ககாலச் சமூகம் காட்டுமிராண்டி வாழ்க்கையில் இருந்து குழுச்சமூக வாழ்க்கை முறைக்கு வந்த பிறகான சமூகம் ஆகும்.

## இரும்புக் கலை

இரும்பு வேலை செய்கின்ற கொல்லர் இருந்ததற்கான பதிவுகளும் சங்க இலக்கியத்தின் வழி நாம் காண முடிகின்றது.

**“கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி”** **(சிறுபாண்.257)**

## தச்சுக் கலை

தச்சுத் தொழில் முடித்துத் தேரை தச்சர்கள் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தப் பின்னர் தேரும் யானையும் இரவலர்களுக்குப் பரிசாக நல்லியக் கோடனால் வழங்கப்பட்டது என்பதைச் சிறுபாணாற்றுப்படையின் வழியாக அறியமுடிகின்றது.

**உள்ளரக் கெளிந்த உறுக்குறு போர்வைக்**
**கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி**
**ஊர்ந்துபெயர்பெற்றஎழில்நடைப்பாகரொடு**
***(சிறுபாண்.256-258)***

### சகடை ஓட்டுதல்

எருதுகள் புட்டிய சகட வண்டிகளைப் பெண்களே ஓட்டி வேளாண்மை செய்த செய்தியினைப் பெரும்பாணாற்றுப்படை வழியாக அறிய முடிகின்றது.

**“காடி வைத்த கலனுடை மூக்கின்**
**மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்ப”**
***(பெரும்.57-58)***

### இசைக்கலை

பாணர்கள் யாழ் வைத்து இசைத்துப் பாடிப் பலரை மகிழ்வித்து வந்தனர். யாழினைக் கொண்டு பாடல் பாடும் ஆண்களைப் பாணன் என்றும், பெண்களைப் பாணினி என்றும் அழைத்தனர். இப்படிப்பட்ட யாழின் தன்மையினைப் பின்வரும் பாடல் வழி நின்று அறியலாம்.

**“பொன்வார்ந் தன்ன புரி யடங்கு நரம்பின்**
**இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ**
**நைவளம் பழநிய நயந்தெரி பாலை**
**கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க**
**இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்**
**துனிகூர் எவ்வமொரு துயர் ஆற்றுப் படுப்ப**
**முனிவிகந் திரந்த முதுவாய் இரவல”**
***(சிறுபாண்.43-40)***

### வேளாண் கலை

இதனோடு தமிழர்களின் வேளாண் கலையானது சங்க இலக்கியத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இவ்வேளாண்மைதான் சங்கத் தமிழர்களின் வாழ்வியல் ஆதாரம். இந்த வேளாண் கலையினை நன்கு கற்றுக் கொண்டு செவ்வனே வேளாண் செய்து தங்களுடைய பொருளாதாரத் தேவையினை நிறைவு செய்ததுடன், விற்பனை செய்தும், பண்டமாற்றம் செய்தும் வாழ்ந்தனர் சங்கத் தமிழர்கள்.

### நெல் விளைவித்தல்

நிலத்தைச் செவ்வியதாக உழுது, எருது இட்டு, களைகளைப் பறித்து, நீர்ப்பாய்ச்சி வளர்த்து வந்து நெல் விளைவித்த செய்தியினைப் பொருநராற்றுப்படை கூறுகின்றது.

**“சிறைகொள் வேலி**
**ஆயிரம் விளையுட்டு ஆக”**
***(பொ.ஆ.246-247)***

மருத நிலத்தில் வசிக்கும் மக்கள் ஏர்களைக் கொண்டு நிலத்தை உழுவதும், மகளிர் நெல் நடும் முன் தன் கால்களால் சேற்றை மிதிப்பதும், பின்நெல் நாற்றுகளை நடுவதும், களைகளைப் பறிப்பதும், அறுவடை செய்து தலையில் சுமந்து வந்து களத்தில் சேர்ப்பதும், நெல்லடித்தப்பின் முறத்தைக் கொண்டு காற்றிலே தூற்றி எடுப்பதும் போன்ற வேளாண் தொழில்களைச் செய்து தங்கள் வாழ்வை வளமாக்கினார்கள் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை நமக்கு விளக்குகின்றது.

**“பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி**
**லுடுப்புமுக முழுக்கொழ மூழ்க ஆன்றித்**
**தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை”**
***(பெரும்.199-201)***

**“நெல் அரிந்து**
**சூடு கோடாகப் பிறந்து நாடொறும்**
**குன்றெனக் குலைஇய குன்றாக் குப்பை**
**கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்**
**சாலிநெல்லின் சிறைகொள் வேலி”**
***(பெரும்:242-246)***

உழவுத் தொழில் உயிர்த் தொழிலாகவும், மன்னரது ஆட்சியும் மக்கள் வாழ்வும் உழவுத்தொழிலைச் சார்ந்ததாகவும்

நடைபெற்று வந்தது என்பதை மலைபடுகடாம் வரிகள் விளக்குகின்றன.

**"வியன்மேவல் விழுச் செல்வத்து**
**இருவகையான் இசைசான்ற**
**சிறுகுடிப் பெருந்தொழுவர்"**

**(ம.கா.120-122)**

உழவர் விதைக்காமல் நாற்று வளர்த்துப் பக்குவமடைந்ததும் நடுதல் வழக்கமாகும். விதைப்பதைவிட நடுதலே மிகச் சிறந்த முறையாகச் சங்ககால மக்களால் கையாளப்பட்டு வந்ததுள்ளது. நிலத்தை உழுதப் பின்னரும் விதைத்தப் பின்னரும் அதனை மட்டம் செய்வதைப் பல்லியாடுதல் என்று குறிப்பிட்டுள்ளனர். நாற்றங்காலில் விதையை விதைத்துப் பின் பறித்து வயலில் அழுத்தி நட்டுள்ளதைப் பொருநராற்றுப்படை விளக்குகின்றது.

**"முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்"**

**(பொ.ஆ.ப.212)**

பயிர்கள் வளரத் தேவையான நீரினைப் பாய்ச்சு, கருவிகளைக் கொண்டு கிணற்றிலிருந்து நீரினை இறைத்து வரிசையாக நின்று பாடிக் கொண்டே வேலை செய்வதை மலைபடுகடாம் எடுத்துக்காட்டுகின்றது.

**"நீர்த் தெவ்வு நிரைத்தொழுவர்**
**பாடு சிலம்பு மிசையேற்றத்**
**தோடு வழங்கும் அகலாம்பியிற்**
**கயனகைய வயல் நிறைக்கும்"**

**(ம.கா.89-92)**

உழவர்கள் வயலில் வளர்ந்துள்ள முற்றியுள்ள நெற்கதிர்களை அறுவடை செய்வதற்கு முன்பு தண்ணும்மை முழக்கியுள்ளதையும், அம்முழக்கத்தால் தேன் கூட்டைக் கூட்டியிருந்த தேனீக்கள் ஒதுங்கிவிடும் என்றும், பறவைகள் அவ்விடத்தில் உள்ள மரங்களில் கூடுகட்டி இருப்பின் அவை வேறு இடத்திற்குச் சென்றுவிடும் என்ற செய்தியினைச் சங்க இலக்கிய வரிகள் வழியாக அறிய முடிகின்றன.

**வெண்ணெல் அரி நர் தண்ணுமை வெரீஇ"**

**(ம.கா.471)**

**"கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்"**

**(பெரும்பாண்.227)**

**"வெண்ணெல் தண்ணுமை வெரீஇ**
**கண்மடல் கொண்ட தீம்தேன் இரி னிய"**

**(புறம்.348-1-3)**

## பொருளாதாரக் கலை

**கள் விற்றல்:** நெல்லினைக் கொண்ட வயலின் அருகில் உள்ள நிலத்தில் பெண்கள் தெளிந்த கள்ளினை விற்றனர் என்ற செய்தியினை மலைபடுகடாம் வழி நின்று அறிய முடிகின்றது.

**"பகன்றைக் கண்ணிப் பிழையர் மகளிர்**
**நெண்டு ஆறு செறுவில் தராய்க்கண் வைத்த**
**விலங்கல் அன்ன போர் முதல் தொலை**
**வளம் செய் வினைஞர் வலசி நல்க**
**துலங்கு தசும்பு வாக்கிய பசும் பொதித் தேரல்**
**இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கள் தொறும் பெறுகுவிர்"**

**(மலை.459-464)**

**மீன் விற்றல்:** பரதவர் கடலில் சென்று பிடிக்கும் மீன்களை அவர்களது மகளிர்கள் சேரி களில் கொண்டுச் சென்று விற்பது, விற்று மீதியுள்ள மீன்களை உலர வைத்தல் போன்ற தொழில்களில் மகளிர்கள் ஈடுபட்டனர் என்பதை அகநானூறு பாடல் வழி அறிய முடிகின்றது.

**"ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ**
**தமிலோன் தந்த கருங்கண் வயமீன்**
**தழையணி அல்குல் செல்வத் தங்கையர்**
**விழவு அயர்மறுகி விலை எனப் பகரும்"**

**(அகம்.320)**

**மோர் விற்றல்:** முல்லை நில மகளிர்கள் மோர்ப்பானையினைத் தலையில் சுமந்து சென்று அருகிலுள்ள ஊர்களில் தினமும்

விற்று வந்தததைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துக் காட்டுகின்றது.

***“உறையமை தீந்துயிர் கலக்கி நுரைதெரி ந்து***
***புகர்வாய்க் குழிசி புஞ்சுமட் டிரீஇ”***
***(பெரும்.158-159)***

***“நள்ளிருள் விடியல் புள்ளழப் போகிப்***
***புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி”***
***(பெரும்.155-156)***

***“............ ஆய்மகள்***
***ஆளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி”***
***(பெரும்.169-170)***

***புல்லரிசி எடுத்தலும் வேட்டையாடலும்*** பாலை நிலத்து வாழ்கின்ற ஆண்கள் வேட்டையாடுவதையும், வழிப்பறிச் செய்தலையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். பாலைநிலத்து வாழ்கின்ற பெண்கள் அண்மையில் குழந்தையைப் பெற்றெடுத்த எயிற்றியர் தவிர ஏனைய பெண்கள் அனைவரும் நன்கு விளைந்து உதிர்ந்து புதையுண்டு கிடக்கும் புல்லரிசிகளை உளி போன்ற கூர்மையான பாறைகளால் குத்திக் கிளறி எடுப்பதைத் தொழிலாகக் கொண்டனர் என்பதைச் சங்க இலக்கியம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

***“மான்தோல் பள்ளி மகவோடு முடங்கி***
***ஈன் பிணவொழியப் போகி நோன்காழ்***
***இரும்புதலை யாத்த திருத்துகளை விழுக்கோல்***
***உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி***
***இருநிலக் கரம்பைப் படுநீறாடி***
***நுண்புலடக்கிய வெண்பல் எயிற்றியர்”***
***(பெரும்.89-94)***

***காவல் காத்தல்:*** குறிஞ்சி நிலத்துப் பெண்கள் காவலின் பொருட்டுத் திணைப்புனத் தில் அமைக்கப்பட்ட பரண் மிகுந்த தினையை உண்ண வரும் பறவைகளைக் கவண் கொண்டு வீசியும் தழலினைச் சுற்றியும் தட்டையினைத் தட்டியும் குளிரினைக் கொட்டியும் தினைப்புனைக் காவல் செய்தமையைப்பின்வரும்சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

***“கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த***
***புலி அஞ்சு இதணம் ஏறி அவண***
***சாரல் சூரல் தகைபெற வலத்த***
***தழலும் தட்டையும் குளிரும் பிறவும்***
***கிளிகடி மரபின் ஊழூழ் வாங்கி***
***உரவுக்கதிர் தெறூம் உருப்பவில் அமயவித்து”***
***(குறிஞ்சி.40-45)***

இசைக்கலை, தச்சுத்தொழில், இரும்பு வார்த்தல், வேளாண்கலை, பொருளியல் கலையின் பிரிவுகளான காவல் காத்தல், மீன் விற்றல், புல்லரிசி எடுத்தல், வேட்டையாடுதல், கள் விற்றல், மோர் விற்றல் போன்ற கலைகள் ஐந்து வகையான நிலமக்களின் அடிப்படைத் கலைகளாக விளங்கியதை இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகின்றன. மேலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற ஐவகையான நில அடிப்படையிலான கலைகள், ஆடவர் மற்றும் பெண்கள் ஈடுபடும் கலைகள் எனப் பலவகையான கலைகளைச் சங்க இலக்கியம் வழியாகக் காண்பதால் சங்ககால மக்களின் கலைகளை இன்னும் ஆழமான பார்வைக்குக் கொண்டு செல்ல பெரிதும் துணைசெய்வதாக இக்கட்டுரை அமையும்.

## துணைநின்ற நூற்கள்

1. கார்த்தி-சிவத்தம்பி, 2003, பண்டைத் தமிழ்ச்சமூகம், மக்கள் வெளியீடு, சென்னை.
2. சுப்பிரமணியன். ச.வே.சு, 2003, தமிழ் இலக்கியவரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. சுப்பிரமணியன். ச.வே.சு., 2006, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. சிற்பி பால சுப்பிரமணியன், நீல பத்மநாபன், 2013, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி.
5. தங்கராசு. மு., 2000, சங்க இலக்கியத்தில் நிலவியல், தமிழர் மலர், சென்னை.